ELIJAH (TAMIL)

சூரைச்செடி எலியா

எலியாவை குறித்த ஆழ்ந்த வேத இரகசியங்கள்

Prophetic Words Ministries

துவக்கவுரை

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாகட்டும். தேவனுடைய சொந்த ஜனமாகிய இஸ்ரவேல் மக்கள், எது ஜீவனுள்ள உண்மையான தேவன், என்பதனை அறியாமல், பாகால்தான் உண்மையான தெய்வமாக இருக்குமோ என்று, வஞ்சிக்கப்பட்டு சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் எலியா என்ற தீர்க்கதரிசி வந்து, தேவனுடைய ஜனங்களை வஞ்சித்த, பாகால் தீர்க்கதரிசிகளுக்கு முன்பாக, வானத்திலிருந்து அக்கினியை அனுப்பி உத்தரவு சொல்லும் தெய்வமே ஜீவனுள்ள தெய்வம் என்ற ஒரு பெரிய சவாலை வைக்கின்றான். ஜனங்கள் எல்லாரும் இந்த சவாலை ஏற்றுக்கொண்டார்கள்(1இராஜா 18: 24).

சவாலை ஏற்றுக்கொண்ட பாகாலின் தீர்க்கதரிசிகளும் பாகாலை சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். உத்தரவு கொடுப்பார் இல்லை (1இராஜா18:29). எலியா என்னும் ஜீவனுள்ள தேவனுடைய தீர்க்கதரிசி கூப்பிட்டான். ஜீவனுள்ள தேவன் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பினார். மக்களும் கர்த்தரே தெய்வம் கர்த்தரே தெய்வம் என்று முகங்குப்புற விழுந்து தேவனை ஏற்றுக்கொண்டார்கள். (1இராஜா 18:39) ஒரே ஒரு தீர்க்கதரிசி முழு இஸ்ரேல் நாட்டையும் தேவனுக்கு நேராக திருப்பினான். மக்களும் ஜீவனுள்ள தெய்வத்தைக் கண்டுக்கொண்டு, பாகாலின் தீர்க்கதரிசிகள் அனைவரையும்

வெட்டிப்போட்டார்கள் (1இராஜா18:40). இது நம் அனைவருக்கும் நன்கு தெரியும்.

இதற்கு பின்பு எலியாவின் வாழ்க்கையில் என்ன நடந்தது? அவன் எப்படி தன்னைக் குறித்து தேவன் வைத்திருந்த திட்டத்தை இழந்து போனான்? எலிசா ஏன் அபிஷேகம் பண்ணப்பட்டான்? எலியா எப்படி தன் தவறை சரி செய்தான்? எலியா எப்படி தன் காரியத்தினை சரி செய்தான்? எப்படி பரிசுத்தமாக வாழ்ந்து எடுத்து கொள்ளப்பட்டான்? என்பதனை என்பதனை "சூரைச்செடி எலியா" என்ற இந்த E-Book -ல் தியானிப்போம். ஜெபத்துடன் இந்த புத்தகத்தை வாசியுங்கள். தேவ ஆவியானவர் உதவிச் செய்வார். ஆழ்ந்த இரகசியங்களை கற்றுக்கொள்வீர்கள்.

தேவாதி தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்

சூரைச்செடி எலியா

எலியா செய்த எல்லாவற்றையும், அவன் பாகாலின் தீர்க்கதரிசிகளை பட்டயத்தினால் கொன்று போட்டதைக் கேள்விப்பட்ட யேசேபேல், எலியாவுக்கு விரோதமாக எழும்பினாள். ஆள் அனுப்பி, **நாளை இதே நேரத்தில் கொலை செய்வேன்** என்று தன் தேவர்கள் பெயரில் சவால்விட்டு எலியாவிடம் சொல்லச்சொன்னாள் (1இராஜா19:2).அவள் ஏற்கனவே பல தீர்க்கதரிசிகளை பட்டயத்தினால் கொன்றுபோட்டவள். இது எலியாவுக்கு நன்கு தெரியும். தன்னையும் கொலை செய்துவிடுவாள் என்று நினைத்து பிராணனைக் காப்பதற்காக யூதாவைச் சேர்ந்த பெயர்செபாவுக்கு புறப்பட்டுப் போகின்றான்(1இராஜா19:3).

எதையும் இழக்க துணிந்தவன் தான் தீர்க்கதரிசியாக இருப்பான். உயிரைக் கூட ஆண்டவருக்காக இழக்க துணிந்தவனைத் தான் தேவன் தீர்க்கதரிசியாக அழைப்பார் (லூக்கா 14:26). உயிரையும் இழக்க துணிந்த எலியா இப்பொழுது உயிருக்கு பயந்து ஓடிப்போகின்றான்.

அவன் வனாந்திரத்தில் ஒரு நாள் பிரயாணம் போய், ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, நான் சாகவேண்டும் என்று கோரி: **"போதும் கர்த்தாவே, என் உயிரை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல"** என்று சொல்லி, படுத்துக்கொண்டு நித்திரைப் பண்ணுகின்றான்(1இராஜா19:4).

ஒரு நாளைக்கு முன்பாக உயிருக்கு பயந்து அதைக் எப்படியாவது காக்க வேண்டும் என்று ஓடி வந்தவன், இப்பொழுது உயிரையும் வெறுக்கின்றான். செத்தால்

போதும் என்று சொல்லி "போதும் ஆண்டவரே என் உயிரை எடுத்துக் கொள்ளும்" என்று விண்ணப்பம் பண்ணுகின்றான். காரணம் என்ன? ஏன் இந்த முரண்பாடு? அந்த ஒரு நாளில் என்ன நடந்தது? தொடர்ந்து வாசியுங்கள்.

இரண்டு நாளைக்கு முன்புதான் பின்மாற்றத்தில் இருந்த ஒரு நாட்டு மக்களையே தேவனிடத்திற்கு எலியா திருப்பினான். ஏற்கனவே அந்த நாட்டை யேசேபேல் மூலமாக பிசாசு ஆளுகை செய்து வந்தது. அசுத்த ஆவிகள் அந்த மக்களை பின்மாற்றத்தில் விழ வைத்தது. இப்பொழுது ஜனங்களை எலியா தேவனிடத்திற்கு மறுபடியும் திருப்பியதால், கோபம் கொண்டு, அவனுக்கு விரோதமாக எழும்புகின்றது. அது அவனுக்கு உயிர் பயத்தைக் கொடுத்து ஓடச் செய்கின்றது.

ஊழியத்தில் ஒரு ஆத்துமாவை தேவனுக்கு நேராக திருப்பும் போது, அந்த ஆத்துமாவை ஆளுகை செய்து கொண்டிருந்த அசுத்த ஆவிகள் ஊழியர்களை கண்டிப்பாக தாக்கும். கூடுமானவரை பயத்தைதான் கொடுக்கும். அதை மேற்கொள்ள வேண்டும். இந்த இரகசியத்தினை ஊழியர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அப்படி தாக்கிய யேசேபேலின் ஆவியை விசுவாசத்தில் எதிர்த்து நின்று மேற்கொள்ளாமல், அதற்கு பயந்து, அது அவனை ஆளுகை செய்ய இடம் கொடுத்துவிட்டான். எனவே, அது அவனை மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டது. அவனைச் சுற்றி அந்தகாரம் போல் சூழ்ந்துக்கொண்டது. இதனால் அவனுக்கும் தேவனுக்கும் இடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

எப்பொழுதும் தேவனோடு தொடர்புக்கொண்டிருந்த எலியாவுக்கு இப்பொழுது

தேவப்பிரசன்னத்தை உணர முடியவில்லை. ஒரு பக்கம் யேசேபேலின் வார்த்தைகள், மறுபக்கம் தேவப்பிரசன்னத்தை உணரமுடியவில்லை. ஒருவேளை தேவன் என்னையும் கைவிட்டாரோ என்று பயந்துவிட்டான். எவ்வளவோ முயற்சி செய்தும் தேவனோடு தொடர்புக்கொள்ள முடியவில்லை. எனவே நான் ஏதோ ஒரு பாவம் செய்துவிட்டேன் என் பிதாக்களைப் பார்க்கிலும் நான் நல்லவன் அல்ல அதனால் தான் தேவன் என்னை கைவிட்டுவிட்டார் என்று நினைத்து என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் நான் சாகின்றேன் என்று விண்ணப்பம் பண்ணினான்.

இன்றும் கூட நிறைய ஊழியக்காரர்கள் இதே பிரச்சனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நான்கு நாட்கள் தேவபிரசன்னம் அருமையாக இருக்கும் மற்ற நாட்கள் வெறுமையை உணருவார்கள். ஊழியத்தினை விட்டு சென்றுவிடலாமா? என்று யோசிப்பார்கள். ஏனெனில் ஊழியத்தின் நிமித்தம் எதிர்த்து வருகின்ற அசுத்த ஆவிகள் போராடிக் கொண்டிருக்கும்.

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்று வாக்குப்பண்ணின தேவன் எலியாவின் நிலைமையைப் பார்த்து ஒரு தூதனை அனுப்பி போஜனத்தைக் கொடுத்தார். அதாவது **உனக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்காது. நான் உனக்காக யுத்தம் பண்ணுவேன். நீ நன்றாக புசித்துக் குடித்து மனரம்மியமாக இரு என்பதற்கு அடையாளமாக இதைச் செய்தார். இப்படிப்பட்ட நேரத்தில் தான் நன்றாக புசித்து குடித்து மனரம்மியமாக இருக்க வேண்டும்.**

தூக்கத்திலிருந்து விழித்துப் பார்த்த எலியா போஜனத்தைப் புசிக்கின்றான். தண்ணீரையும் குடிக்கின்றான். தூதன் தட்டி எழுப்பியதை உணருகின்றான். தூதன் வந்த அற்புதத்தினை கண்களால் பார்க்கின்றான். ஆனாலும், தேவபிரசன்னத்தை உணரமுடியவில்லை… எனவே மறுபடியும் சோர்ந்து போனான். மறுபடியும் இந்த சோர்வு வரக்காரணம் என்ன? ஏன் இந்த சோர்வு வந்தது?

சூரைச்செடியின் கீழ் சோர்ந்து போய் எலியா செய்த ஜெபத்தைக் தேவன் கேட்டார். உடனே போஜனத்தை கொடுக்க ஒரு தூதனையும், அசுத்த ஆவிகளோடு யுத்தம் பன்ண தூதர்களின் கூட்டத்தையும் அனுப்பினார். அவனுக்கு விரோதமாக எழும்பி அவனைச் சூழ்ந்துக்கொண்ட ஆவிகளோடு வானத்தில் அவர்கள் யுத்தம் பண்ண ஆரம்பித்துவிட்டார்கள்.

இப்படி யுத்தம் நடக்கும் போதும் தேவபிரசன்னத்தை உணர முடியாது.

அதாவது பிசாசு ஒரு ஊழியக்காரனை அழிக்க எழும்பும் போதும் தேவபிரசன்னத்தை உணர முடியாது. அப்படி எழும்பும் ஆவிகளோடு பரலோகம் யுத்தம் பண்ணும் போதும் தேவபிரசன்னத்தை உணர முடியாது.

முதலில் அசுத்த ஆவிகள் அவனை அழிக்க எழும்பியது அதனால் தேவபிரசன்னத்தை உணரமுடியவில்லை. இப்பொழுதோ அந்த ஆவிகளோடு பரலோகம் யுத்தம் பண்ணுகின்றது. எனவே, அவனால் தேவபிரசன்னத்தை உணர முடியவில்லை. தேவனுடைய வார்த்தையையும் கேட்க முடியவில்லை. எனவே போஜனத்தை சாப்பிட்ட எலியா மறுபடியும் படுத்துவிட்டான்.

மறுபடியும் இரண்டாந்தரம் கர்த்தருடைய தூதன் வந்து, அவனை தட்டி எழுப்பி, போஜனம் பண்ணு நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான். போஜனத்தைப் புசித்த எலியா அந்த பெலத்தினாலே நாற்பது நாள் இரவும் பகலும் நடந்து ஓரேப் என்னும் பர்வதம் மட்டும் சென்றான். (1இராஜா19:8)

அங்கே சென்ற அவன் மறுபடியும் கெபிக்குள் தங்கினான். ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்? என் காரியம் என்ன? அடுத்த திட்டம் என்ன? என்று கேட்க வேண்டியவன் சோர்ந்து போய் கெபிக்குள் சென்றுவிட்டான். அந்த யேசேபேலின் ஆவிகளின் தாக்குதல் அவனைவிடவில்லை தொடர்ந்து தாக்குகின்றது (1இராஜா19:9).

இப்பொழுது தேவன் அவனோடு பேசுகின்றார் உன் காரியம் என்ன? என்று கேட்கின்றார். அதற்கு எலியா ***சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக நான் வெகு பக்திவைராக்கியமாக இருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையை தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளை பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியாய் இருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகின்றார்கள்*** என்று விண்ணப்பம் பண்ணினான் (1இராஜா19:10). இதை புதிய ஏற்பாட்டில் இஸ்ரவேலுக்கு விரோதமாக விண்ணப்பம் பண்ணினான் என்று சத்திய வேதம் கூறுகின்றது (ரோமர் 11:3).

யேசேபேலின் ஆவியினால் தாக்கப்பட்ட எலியா எந்த ஜனங்களை தேவனிடத்திற்கு திருப்பினானோ, அந்த ஜனங்களுக்கு விரோதமாக

விரோதமாக அதாவது தன்னால் பின்மாற்றத்தில் இருந்து மனந்திரும்பி, ஜீவனுள்ள தேவனைக் கண்டுக் கொண்ட ஜனங்களுக்கு விரோதமாக விண்ணப்பம் பண்ணுகின்றான். இது தான் சூன்ய ஜெபம். பிசாசினால் தாக்கப்பட்டவர்கள் இப்படித்தான் ஜெபம் பண்னுவார்கள்.

எந்த ஊழியக்காரனைக் கொண்டு தேவன் ஒரு மனிதனை அல்லது ஒரு குடும்பத்தை இரட்சிக்கின்றாரோ, அதே ஊழியக்காரனைக் கொண்டு அவர்களுக்கு விரோதமாக பேச, ஜெபிக்க வைப்பான் . இது பிசாசின் தந்திரம் இதை இன்றைய ஊழியங்களிலும் கூட பார்க்கலாம்.

எலியா தேவனுடைய தீர்க்கதரிசி. தேவசமூகத்தில் நிற்பவன். பிசாசின் தந்திரத்தினால் வஞ்சிக்கப்பட்டு இப்படி பேசுகின்றான் என்பதனை அறிந்த தேவன் கிருபையாக அவனுக்கு ஒரு அடையாளத்தை காட்டுகின்றார். கெபியை விட்டு வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாக பர்வத்தில் நில் என்றார். அவனும் வந்து நின்றான். கர்த்தர் கடந்து போனார். அப்போது பர்வதங்களை பிளக்கின்றதும் கன்மலையை உடைகின்றதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று. அதை பார்த்த எலியா தேவன் அதில் இருப்பார் என்று நினைத்தான். ஆனால் அதில் தேவன் இல்லை. அடுத்து பூமி அதிர்ச்சி உண்டாயிற்று அதிலும் இல்லை அடுத்து அக்கினி அதிலும் தேவன் இல்லை. (1இராஜா19:11,12)

அதாவது தேவன் மோசேயோடு எரியும் அக்கினி சூளையில் இருந்து பேசினார் (யாத்3:2). யோபுவோடு பெருங்காற்றிலிருந்து பேசினார் (யோபு 38:1). அதே போல் எலியாவோடு பேசும் நேரமெல்லாம் பெருங்காற்று

பூமியதிர்ச்சி, அக்கினி உண்டாகும். அதை பார்த்த எலியா தேவன் நம்மோடு பேசுகின்றார். இது தேவன்தான் அவருடைய சத்தம்தான் என்பதனை உணர்ந்து கொள்ளுவான். அதேபோல் இப்போது அக்கினி, பெருங்காற்று, இடிமுழக்கம் வரும் என்று நினைத்தான். ஆனால் அப்படி ஒன்றும் வரவில்லை. எனவே, தேவன் கைவிட்டுவிட்டார் என்று சோர்ந்து போய்விட்டான்.

அக்கினிக்கு பின் மெல்லிய சத்தம் உண்டாயிற்று அதில் தேவன் இருந்தார். அதைக்கேட்டபோது தேவன் அதிலிருக்கின்றார் என்பதனை அறிந்து, சால்வையினால் தன் முகத்தை மூடிகொண்டு வெளியே வந்து நிற்கின்றான்.

மறுபடியும் எலியாவே என்ன காரியம் என்று தேவன் கேட்கின்றார். அதற்கு எலியா **சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக நான் வெகுபக்தி வைராக்கியமாக இருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையை தள்ளி விட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளை பட்டயத்தினால் கொன்று போட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியாய் இருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகின்றார்கள்** என்று ஏற்கனவே ஜெபித்த சூன்ய ஜெபத்தைதான் செய்கின்றான். (1இராஜா19:14)

தன் நிலையை மாற்றுவான் என்று தேவன் எதிர்பார்த்தார். எலியாவோ அதேபோல்தான் இருந்தான். தன் ஜெபத்தை மாற்ற வில்லை சூன்ய ஜெபத்தைதான் மறுபடி மறுபடி செய்கின்றான்.

தேவன் ஒரு மனிதனுக்கு நாவில் அதிகாரம் கொடுத்து விட்டால் அவன் என்ன

கேட்கின்றானோ அதை கொடுக்க வேண்டும். இல்லையேல் அவன் அதிகாரத்தை அதிகாரத்தை பிடுங்க வேண்டும். அப்படி பிடுங்கினால் எலியாவுக்கு பாதிப்பு வரும் அசுத்த ஆவிகள் அவனை உண்டு இல்லையென்று பண்ணிவிடும். இது தவிர அவன் மூலமாக நடந்த அற்புதங்கள், அவன் நாவினால் பண்ணின ஜெபங்கள் அனைத்தையும் கேன்சல் பண்ண வேண்டும். இது ஆவிக்குரிய சட்டம்.

இப்பொழுது எலியா தன் நிலையை மாற்ற வேண்டும் அல்லது தேவாதி தேவன் எலியாவின் ஜெபத்தை கேட்டு இஸ்ரேல் ஜனங்களை தண்டிக்க வேண்டும். இல்லையேல் எலியாவின் உயிரையை எடுக்க வேண்டும் அல்லது நாவின் அதிகாரத்தை கேன்சல் பண்ணவேண்டும். என்ற இக்கட்டான நிலைமை ஏற்பட்டது. கடைசியாக தேவன் எலியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

"போதும் ஆண்டவரே, தான் சாகவேண்டும்; என் ஆத்துமாவை எடுத்து கொள்ளும்" என்ற ஜெபத்திற்கு பதிலாக, எலிசாவை உன் ஸ்தானத்தில் அபிஷேகம் பண்ணு என்றார். இதன் அர்த்தம் என்னவென்றால் சரி நான் உன்னை எடுத்து கொள்கின்றேன். இன்னும் உன்னுடைய ஊழியம் முடிவடையவில்லை. மீதி ஊழியத்தினை செய்வதற்காக எலிசாவை அபிஷேகம் பன்ணி அவனை உருவாக்க வேண்டும். அவன் உருவாக்கப்பட்ட பின்பு உன்னை எடுத்து கொள்கின்றேன் என்பதாகும்.

அடுத்து இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையை தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளை பட்டயத்தினால் கொன்று

போட்டார்கள். என்று அவர் களுடைய குற்றங்களை சொல்லி, அவர்களுக்கு விரோதமாக பண்ணிண ஜெபத்திற்கு பதிலாக ஆசகேலையும், யேகூவையும், எலிசாவையும் அபிஷேகம்பண்ணு. ஆசகேல் இஸ்ரேல் ஜனத்திற்க்கு விரோதமாக வந்து அவர்களை கொன்று போடுவான். அவன் கைக்கு தப்பினவர்களை யேகூ கொன்று போடுவான். அதற்கு தப்பினவர்களை எலிசா கொன்று போடுவான் என்றார்.

மூன்றாவதாக நான் ஒருவன் மாத்திரம் மீதியாய் இருக்கிறேன் என் பிராணனையும் வாங்கத் தேடுகின்றார்கள் என்ற விண்ணப்பத்திற்க்கு பதிலாக பாகாலுக்கு முடங்காதிருக்கின்ற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கின்ற வாய்களையுமுடைய ஏழாயிரம் பேரை இஸ்ரேலில் மீதியாக வைத்திருக்கின்றேன் என்றார். இப்படியாக எலியா யேசேபேலின் ஆவியினால் தாக்கப்பட்டு செய்த சூன்ய ஜெபத்திற்கு தேவன் பதிலளித்தார்.

யேசபேல் ஆவியினால் தாக்கப்பட்ட எலியா, போதும் ஆண்டவரே, என் ஆத்துமாவை எடுத்து கொள்ளும் என்று தேவசித்தத்திற்கு மாறாக ஜெபம் செய்து தேவதிட்டத்தினை முழுமையாக நிறைவேற்றாமல் தன் ஸ்தானத்தினை எலிசாவுக்கு விட்டு கொடுத்துவிட்டான்(1இராஜா 19:4) தேவசித்தத்தின்படி ஜெபிக்கும் போது, சிலருக்கு ஜெபம் ஆசீர்வாதமாக இருக்கும். எலியாவுக்கு அவன் செய்த ஜெபமே முடிவை கொண்டு வந்து விட்டது. ஏனெனில் எலியாவை குறித்த தேவனுடைய திட்டம் பெரிதாக இருந்தது. தன்னை குறித்த தேவனுடைய திட்டத்தினை முழுமையாக நிறைவேற்றி முடிக்காமல் அதனை போதும் என்று சொல்லி இழந்துவிட்டான்.

எப்பொழுது ஒரு ஊழியக்காரன் போதும் என்று நின்று விடுகின்றானோ, இதற்கு பின்பு தேவன் அடுத்த திட்டங்களை தருவதனை நிறுத்திவிடுவார். இன்னும் இன்னும் என்று சோர்ந்து போகாமல் தேவதிட்டத்தினை நிறைவேற்ற வாஞ்சையாக இருப்பவர்களுக்குதான் புதுபுது திட்டத்தினை கொடுத்துக்கொண்டே இருப்பார். அதனால் தான் சில ஊழியர்களுக்கும் ஊழிய ஸ்தாபனங்களுக்கும் அதிகமான திட்டங்களை கொடுக்கின்றார். பெரிய ஊழியங்களை பெரிய செலவில் செய்கின்றார்கள். ஒருவேளை இதை வாசிக்கின்ற ஊழியர்கள் யாராவது சோர்ந்து போய் அல்லது அவ்வளவுதான் என்று நின்றிருந்தால் இன்னும் வாஞ்சையாக தேவனிடம் கேளுங்கள் இன்னும் புதுபுது திட்டங்களை தருவார்.

எலியா இழந்துபோன மீதியான திட்டத்தினை நிறைவேற்றி முடிக்க எலிசா அபிஷேகம் பண்ணப்படுகின்றான். பொதுவாக தேவனுடைய திட்டத்தினை முழுமையாக ஒரு ஊழியன் நிறைவேற்றி முடிக்கவில்லை என்றால் வேறு ஒருவருக்கு வாய்ப்பு சென்று விடும். இது வேதச்சட்டம். இஸ்ரேல் மக்களை கானானுக்குள் கூட்டி கொண்டு செல்வதற்காகதான் மோசே அபிஷேகம் பண்ணப்பட்டான். ஆனால் கீழ்படியாமையினால் மோசே அதை நிறைவேற்ற முடியவில்லை. எனவே மோசேக்கு பதிலாக அவனுக்கு பணிவிடை செய்த நூனின் குமாரனாகிய யோசுவாவை தேவன் அபிஷேகம் பண்ணினார். அவன் இஸ்ரேல் மக்களை கானானுக்குள் கூட்டிக்கொண்டு சென்றான்.

அதேபோல் இராஜா வீட்டு கல்யாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் வராமல் அதை அசட்டை பண்ணி,

அபாத்திரராய் போகும் போது வழியருகே உள்ள நல்லார் பொல்லாதவராகிய மற்றவர் களுக்கு வாய்புகளை அந்த இராஜா கொடுக்கின்றான் என்று வேதத்தில் வாசிக்கின்றோம்.(மத்:22) எனவே அழைப்பையும் தேவதிட்டங் களையும் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

போதும் ஆண்டவரே என்னை எடுத்து கொள்ளும் என்று விண்ணப்பம் செய்த எலியாவின் ஜெபத்தினை கேட்ட தேவன், உடனே எடுத்து கொள்ளாமல் எலிசா தீர்க்கதரிசன ஊழியத்தில் உருவாக்கப்படும்வரை அவனை உயிரோடு இருக்க அனுமதித்தார். எலிசாவோ எலியாவோடு இருந்து அவன் கைக்கு தண்ணீர்வார்த்து பணிவிடை செய்து கொண்டிருந்தான்.

பாருங்கள் எலியாவின் ஸ்தானத்திற்குதான் எலிசா வரப்போகின்றான். ஆனாலும் உடனே தேவன் பயன்படுத்தவில்லை. பணி விடைக்காரனாக இருந்து கற்று கொள்ள வைக்கின்றார். யோசு வாவும் மோசேக்கு பணிவிடைக் காரனாகத்தான் இருந்தான். மூத்த ஊழியர்களுக்கு அடங்கியிருந்து கீழ்படிதல், தாழ்மையை கற்று கொள்கின்றவர்களைதான் தேவன் பயன்படுத்தமுடியும். **"என் மேல் அபிஷேகம் இருக்கு யாரும் என்னை ஒன்னும் பன்ன முடியாது. நான் வயலில் ஏர் பூட்டி விவசாயம் செய்து கொண்டிருந்தேன்.. தேவனே என்னை தேடி அழைத்து அபிஷேகம் பண்னினார். நான் எதுக்கு எலியாவுக்கு பணிவிடை செய்யனும்"** என்று எலிசா நினைத்திருந்தால் மறுகணமே எலிசாவுக்கு பதில் இன்னோரு மனிதன் அபிஷேகம் பன்னப் பட்டிருப்பான். எலிசாவை தேவன் பயன்படுத்திருக்கமாட்டார். இது தான் ஆவிக்குரிய சட்டம்.

இந்த சட்டத்தின் படி ஒருவன் ஊழியம் செய்யாவிட்டால் அவன்

அவன் அங்கீகரிக்கப்படமாட்டான். இதைதான் பேதுரு வாலிபர்களுக்கு சொல்லும் போது மூப்பருக்கு கீழ்படியுங்கள் என்று சொல்லி விட்டு தொடர்ச்சியாக ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படி கர்த்தருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் என்று சொல்லுகின்றான்(1 பேதுரு 5). **இதில் தேவனுடைய பலத்த கை என்பது மூப்பர்கள், முதிர்ந்த ஊழியர்கள் தான்.**

இளம் ஊழியர்களுக்கும், ஊழிய அழைப்பினை பெற்ற வர்களுக்கு நான் கற்றுக்கொண்டு சொல்லும் சத்தியம் அடங்கி யிருங்கள்... அடங்கியிருங்கள்.... அடங்கியிருங்கள்... ஏற்றகாலத்தில் தேவன் உங்களை பயன் படுத்துவார். அடங்கியிருக்காமல் இருப்பதினால்தான் அழைப்பையும், வரங்களையும் பெற்ற நிறைய பேர்களை தேவனால் பயன்படுத்த முடியவில்லை.

இனிதான். எலியா எப்படி தன் காரியத்தினை சரி செய்தான்? என்பதனையும், எப்படி எடுத்து கொள்ளப்பட்டான்? என்ற ஆழ்ந்த இரகசியத்தினையும் தியானிக்க போகின்றோம். கவனமாக வாசியுங்கள்.

என்னை எடுத்து கொள்ளும் ஆண்டவரே என்று ஜெபித்த ஜெபத்தினை கேட்ட தேவன், தன்னுடைய ஸ்தானத்திற்க்கு எலிசாவை அபிஷேகம் பண்ணிவிட்டார் என்பதனையும், தன்னுடைய தீர்க்கதரிசன அழைப்பு மாறிவிட்டதையும், இனி பூமியில் அதிக நாட்கள் இருக்க முடியாது என்பதனையும், மரணம் எப்பொழுது வேண்டுமென்றாலும் வரும் என்பதனையும் எலியா நன்கு அறிந்து கொண்டான். எப்போது வேண்டுமென்றாலும் அவனுக்கு மரணம் சம்பவிக்கலாம்.

ஒருவனுக்கு மரணம் வரும் போது, அவன் பரிசுத்தம் இல்லாமல் இருந்தால் தேவனை சந்திக்கமுடியாது என்பதும்,

பாவக்கறைகள் இருக்குமென்றால் பாதாளத்திற்கு கொண்டு போய்விடும் என்பதும் நம் அனைவருக்கும் நன்கு தெரியும். இந்த இரகசியத்தினை தெரிந்து கொண்டே எலியா எப்பொழுதும், எந்த நொடியும், எந்த இமைபொழுதும் மரணம் சம்பவிக்கலாம். எனவே ஒவ்வொரு நொடியும் தேவனை சந்திக்க ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். இதன்படி ஒவ் வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் பரிசுத்தமாக வாழ்ந்தான்.

அவன் எப்படி வாழ்ந்தான் என்பதனை குறித்து வேதத்தில் அதிகமாக எழுதவில்லை. ஆனால், அவன் ஸ்தானத்திற்க்கு அபிஷே கம்பண்ணப்பட்டு, அவனால் கற்பிக்கப்பட்ட எலிசாவின் வாழ்க் கையை ஆராய்ந்து பார்த்தால் அவன் எப்படி வாழ்ந்தான் என்பதனை அறிந்து கொள்ளலாம். சரி எலிசாவின் வாழ்க்கை எப்படி இருந்தது? கொஞ்சம் தொடர்ந்து வாசியுங்கள்.

ஒருநாள் சூனேம் என்கின்ற ஊருக்கு போகும்போது கனம் பொருந்திய ஒரு ஸ்திரீ அவனை போஜனம்பண்ண வருந்தி கேட்டு கொண்டாள். அப்படியே அவன் பயணப்பட்டு வருகின்ற போதெல்லாம் அங்கே போஜனம் பண்ணும்படி தங்குவான். இப்படி அவன் வரும் சமயத்தில் அவனுடைய நடக்கையை பார்த்த, சூனேம் ஊராளாகிய கனம் பொருந்திய ஸ்தீரீ எலிசாவை குறித்து இவர் பரிசுத்தவான் என்று காண்கின்றேன் என்று தன் கணவனிடம் சாட்சி கொடுத்தாள். (2இராஜா 4:9) ஒரு ஸ்திரீ இப்படி சாட்சி கொடுப்பது எளிதான காரியம் அல்ல.

பார்வை,சிந்தனை, யோசனை, எண்ணங்கள், நினைவுகள், பேச்சு, நடக்கை, உடை எல்லாமே பரிசுத்தமாக இருந்தால்தான் இப்படி சாட்சி கிடைக்கும். அந்தரங்கம் அசிங்கமாக

இருந்துவிட்டு, வெளியரங்கம் பரிசுத்தமாக இருந்தால் ரொம்ப நாள் நீடிக்காது. ஒரு நாள் எல்லாம் வெளுத்து விடும். ஆனால், ஒவ்வொருமுறையும் எலிசாவை பார்க்கின்ற அந்த ஸ்திரீ அவனிடம் பரிசுத்ததை மட்டும்தான் பார்த்தாள். அந்தள வுக்கு எலிசாவின் வாழ்க்கை பரிசுத்தமாக இருந்தது.

அவனால் எப்படி இந்த பரிசுத்த வாழ்க்கை வாழ முடிந்தது? ஒவ்வொரு நாளும் பரிசுத்தமான பின்புதான் தேவ சமூகத்தை விட்டு வெளியே வருவான். **நேற்று பரிசுத்தமாக இருந்தேன், முந்தினநாள் பரிசுத்தமாக இருந்தேன் என்று சாக்கு போக்கு சொல்லி தன்னை தேற்றி கொள்ளாமல், ஒவ்வொரு நொடியும் தன்னை பரிசுத்தமாக காத்துகொண்டான்.**

ஒரு நாள் பரிசுத்தமாக இருக்க ஜெபம் பண்ணி, தன்னை சுத்திகரித்துவிட்டு அடுத்தடுத்த நாட்கள் அசால்ட்டாக இருப்ப தினால் தான், இன்றைய ஊழியர்கள் எளிதில் பாலியல் பாவத்தில் விழுந்து விடுகின் றார்கள். ஒவ்வொரு முறையும் தன்னை சுத்திகரித்து கொள்கின் றவர்களால் தான் பாவத்தினை ஜெயித்து பரிசுத்தமாக வாழ முடியும்.

அப்படி, எலிசா ஒவ்வொரு நாளும் தன்னை பரிசுத்தப்படுத்தி கொண்டான். இப்படி பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பதனை தன் ஆசானான எலியாவின் வாழ்க்கையில் இருந்துதான் கற்று கொண்டான். எலியாவை போல் தான் இவன் வாழ்ந்தான். அப்படியென்றால் எலியாவும் ஒவ்வொரு நாளும் தன்னை பரிசுத்தப்படுத்தி கொண்டே இருந்தான். எந்த நிமிடம் கூட தன்னுடைய மரணம் இருக்கலாம். எனவே ஒவ்வொரு நிமிடமும் பரிசுத்தத்தினை மட்டும் ஜாக்கிரதையாக பார்த்து கொண் டான். சின்ன பாவம் என்றால் கூட

பிறகு பார்த்து கொள்ளலாம் என்று நிர்விசாரமாக இருக்காமல் உடனே சுத்திகரித்தான். சுத்திகரித்து கொண்டே இருந்தான்.

மேலும் மரணம் எப்போது வேண்டுமென்றாலும் இருக்கலாம் என்பதனால் சொத்து சேர்பதையோ, வீடு, நிலம், வாங்குவதையோ, பணம் சம்பாதிப்பதையோ,வஸ்திரங்களையும், ஒலிவத்தோப்புகளையும், திராட்சத்தோட்டங்களையும், ஆடு மாடுகளையும், வேலைக்காரர்களையும், வேலைக்காரிகளையும் சம்பாதிக்காமல் (2இராஜா5:26) பரிசுத்தமாக இருந்து, தேவாதி தேவனை சந்திப்பது மாத்திரமே அவனுடைய இலக்காக இருந்தது. ஏன் தனக்கு வரும் காணிக்கைகளை கூட தேவனிடம் விசாரித்துதான் வாங்கினான். தகுதியில்லாதவர்கள் காணிக்கைகளை கொடுத்தால் அவன் அதை அங்கீகரிப்பதில்லை. ஏனெனில் அதன் மூலம் சாபம் வரும் என்பதனை அறிந்திருந்தான்.

இதை போல் நம்மால் வாழ முடியுமா? சம்பாதிக்ககூடாதா? வேலைக்கு செல்லகூடாதா? என்று கேட்கலாம். வேலை முக்கியமா? பரலோக நீதி முக்கியமா? என்ற கேள்வி வரும்போது பரலோகநீதிக்கு தான் முதல் இடம் கொடுக்க வேண்டும். இதைதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூட முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் (உணவு, உடை. இருப்பிடம்) கூடக்கொடுக்கப்படும் என்றார்.(மத் 6:33)

பரலோக நீதியை தேடாமல், கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தம் இல்லாமல், வேலை வேலை என்று சதா காலமும் இருப்பவர்கள் மேல் சாபம் தான் இருக்கும். அவர்களுக்கு எக்காரியத்திலும் பரலோகம் உதவி செய்ய முடியாது. தினமும் ஜெபித்து, பரிசுத்தத்திற்க்கு ஒப்புகொடுத்துவிட்டு, இன்றைக்கு கர்த்தருடைய வருகை வந்தாலும்

செல்ல ஆயத்தம் என்ற நிலைமையில், ஏதோ கொஞ்ச நேரம் முடிந்த வேலையை செய்பவர்கள் மேல் தேவனுடைய ஆசீர்வாதம் இருக்கும். அவர்களுக்கு எக்காரியத்திலும் பரலோகம் உதவி செய்யும். அது பல மடங்கு பெருகும்.

இப்படி எலியா சம்பா திப்பதனை வெறுத்து, உலகத்தி னை வெறுத்து, ஆசைகளை வெறுத்து, பொருட்களை வெறுத்து பரிசுத்தம் பரிசுத்தம் என்றும், தேவனை சந்திக்க ஆயத்தமாகவும் இருந்ததினால், அவன் சரீர உறு ப்புகள் ஒவ்வொன்றும் பரிசுத்த மடைய ஆரம்பித்து விட்டது. ஒவ்வொரு உறுப்பும் பிரகாசிக்க ஆரம்பித்து விட்டது. ஒவ்வொன் றும் மறுரூபம் அடைய ஆரம்பித்துவிட்டது. கடைசியில் ஒவ்வொன்றும் நித்திய ஜீவனை பெற்று விட்டது.

சரீரத்தில் ஏதோ ஒரு உறுப்பு நித்திய ஜீவனை பெறாமல் இருந்தால் கூட மரணத்திற்க்கு அதிகாரியாக இருந்த பிசாசு அதைக்கொண்டு அந்த சரீரத்தின் உயிரை எடுத்துவிடுவான். ஆனால் எலியாவின் வாழ்கையில் அவன் சரீரத்தின் மேல் மரணத்திற்கு கூட அதிகாரம் இல்லை. அந்தளவுக்கு அவன் சரீரம் பரிசுத்தமாக இருந்தது. அனைத்து உறுப்புகளும் நித்திய ஜீவனை பெற்றன.

உலகத்தில் பிறக்கின்ற ஒவ்வொரு ஆத்துமா மீதும் கடைசி சத்துருவான மரணத்திற்க்கு அதிகாரம் உள்ளது. அப்படி ஒரு சரீரத்தின் மேல் கடைசி சத்துருவான மரணத்திற்க்கு அதிகாரம் இருந்தால், அந்த சரீரத்தினை பரலோகம் உயிரோடு எடுக்க முடியாது. பிசாசு போராடிக் கொண்டிருப்பான். அதனால் தான் இன்றும் கூட அநேக விசுவாசிகள் மரிக்கின்றார்கள். அதிகாரம் இல்லையென்றால் உயிரோடு எடுப்பதனை பிசாசு தடுக்க

முடியாது. பரலோகம் எடுத்துவிடும்.

ஏன் நம்தேவன் நல்லவர்தானே விசுவாசிகள் எல்லோரையும் உயிரோடு எடுத்துவிட்டால் எல்லோரும் பரலோகம் சென்று விடுவார்கள். பூமியில் கஷ்டப்பட வேண்டாம். பிசாசின் போராட்டம் இருக்காது. பரலோகத்திற்க்கும் ஆள் சேர்ந்துவிடும். என்பதாய் சிலருக்கு சந்தேகம் இருக்கலாம். அதற்கான பதில் தான் இது.

மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?(1 கொரி 15:55) என்ற சத்திய வசனத்தின் படி எலியா மரணத்தை ஜெயித்தான். மரணத்திற்க்கு அவன் சரீரத்தின் மீது அதிகாரம் இல்லை. எனவே ஏற்ற நேரத்தில் உயிரோடு எடுக்கப்பட்டான்.

நேரம் வந்தது அக்கினி இரதங்களும் குதிரைகளும் வந்தன எலியா சுழல் காற்றினால் பரலோகத்திற்க்கு ஏறி போனான்(2 இராஜா2:11)

இன்றும் பூமியில் வாழும் அனைத்து விசுவாசிகளும் கர்த்தருடைய இரகசிய வருகையை குறித்தும், உயிரோடு எடுக்கப்படுவதை குறித்தும் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கின்றார்கள். பரிசுத்தவான்கள் அதைதான் உபதேசிக்கின்றார்கள். திருடன் வருகின்ற விதமாக இந்த இரகசிய வருகை இருக்கும் என்று சத்திய வேதமும் அதை உறுதிப்படுத்துகின்றது. திருடன் வருகின்ற விதம் என்றால் எந்த நேரமும், எந்த வினாடியும், எந்த இமை பொழுதும் எந்த விதமான அறிவிப்புமின்றி வருகை இருக்கும். அப்போது மரணத்தை ஜெயித்தவர்கள் மாத்திரமே எடுத்து கொள்ளப்படுவார்கள்.

யாரெல்லாம் மரணத்தினை ஜெயிப்பார்கள்? யாருடைய சரீரத்தின் அவயங்களெல்லாம் நித்திய ஜீவனை பெற்றுள்ளதோ

அவர்கள் மாத்திரமே மரணத்தினை ஜெயிப்பார்கள்.

யாருடைய சரீரத்தின் அவயங்களெல்லாம் பிரகாசிக்கின்றதோ அவர்களுடைய சரீரத்தின் அவயங்களெல்லாம் நித்திய ஜீவனை பெறும்.

யாருடைய சரீரத்தின் அவயங்களெல்லாம் பரிசுத்தமாக இருக்கின்றதோ அவர்களுடைய சரீரத்தின் அவயங்களெல்லாம் பிரகாசிக்கும்.

யாரெல்லாம் வேலை, குடும்பம், தொழில், படிப்பு, பணம்.சம்பாத்தியம், ஆஸ்தி, சுய ஆசை இதற்க்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கர்த்தருடைய வருகையை எதிர்பார்த்து தினமும் அதற்கு ஆயத்தமாகி, சிறு பாவமாக இருந்தாலும் நிர்விசாரமாக இராமல் உடனே தன்னை சுத்திகரித்து... சுத்திகரித்து கொண்டே இருக்கின்றார்களோ அவர்களுடைய சரீரத்தின் அவயங்கள் அனைத்தும் பரிசுத்தமாக இருக்கும்.

அப்படிப்பட்டவர்களுக்குத்தான் மரணத்தினை ஜெயம் எடுக்கும் அபிஷேகத்தினை தேவன் கொடுப்பார். அப்படிப்பட்டவர்கள் தான் கர்த்தருடைய வருகையில் உயிரோடு எடுத்துகொள்ளப்படுவார்கள்.

இதை வாசிக்கின்ற உங்களுக்கு இந்த சத்தியம் புரிந்தாலே கர்த்தருடைய வருகையில் எடுத்துகொள்ளும் அழைப்பு உங்களுக்கு உள்ளது என்று அர்த்தம். எனவே தினமும் வருகைக்கு ஆயத்தப்படுங்கள் மரணத்தினை ஜெயிக்கும் அபிஷேகத்தினை தேவன் தந்து தம்முடைய வருகையில் சேர்த்துகொள்வார். ஆமென்.

ஜெபம்:

எங்களை அதிகமாக நேசிக்கின்ற பரலோக பிதாவே

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே இந்த தீர்க்கதரிசன செய்தியின் மூலமாக என்னோடு பேசினீர் அதற்க்காக நன்றி. இந்த தீர்க்கதரிசன ஊழியத்திற்க்காக உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன். உம்முடைய இரகசிய வருகைக்கு தினமும், எந்த நிமிடமும் ஆயத்தப்பட ஒப்புகொடுக்கின்றேன். நீர் என்னை பரிசுத்தப்படுத்தும். மரணத்தினை ஜெயிக்கும் அபிஷேகத்தினை எனக்கு தாரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிக்கின்றேன் எங்கள் நல்ல பிதாவே ஆமென்.

கர்த்தருடைய மகா பெரிய கிருபையினால் இதில் வரும் செய்திகள் E-Book வடிவில் AMAZON KINDLE -ல் இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது. நீங்களும் இப்புத்தகத்தை வாசித்து தேவஆசீர்வாதத்தினை பெற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிந்தனைக்கு : எலிசா இரட்டிப்பான வரம் கேட்கும் போது எலியா ஏன் உடனே கொடுக்கவில்லை?

எலியா எடுத்து கொள்வதனை அறிந்த எலிசா அவனிடம் உள்ள வரத்தை இரட்டிப்பாக பெற ஆசைப்பட்டு அவனை விடாமல் பெத்தேல், எரிகோ, யோர்தான் என ஒவ்வொரு இடமாக பின் தொடர்ந்தே சென்றான். கடைசியில் உனக்கு நான் செய்யவேண்டியது என்ன? கேள் என்று எலியா சொல்லும்போது இரட்டிப்பான வரம் வேண்டும் என்று எலிசா கேட்டான். ஆனால் எலியா உடனே கொடுக்கவில்லை. அரிதான காரியம் என்றான். (2இராஜா 2:9)

இதனை குறித்து சிலர் எலியாவுக்கு பொறாமை இருந்தது அதனால்தான் எலிசா கேட்டவுடன் எலியா கொடுக்கவில்லை என்பார்கள். நன்றாக இந்த சூழ்நிலையை கவனித்து பாருங்கள். எலியா எடுத்து கொள்ளப்படும் நேரம்தான் இந்த சம்பவம் நடந்தது. இந்த நேரத்தில் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் பரிசுத்தமாக்கப்பட்ட நிலையில் தான் இருந்தான் கொஞ்சம் கூட கபடம் இல்லை. அப்படி கபடம், சூது, வஞ்சகம், பொறாமை இருந்தால் எடுத்து கொள்ளப்பட முடியாது.(வெளி 14:5)

பின்பு ஏன் எலியா இரட்டிப்பான வரத்தை உடனே கொடுக்கவில்லை? எலிசாவின் அழைப்பு எலியாவின் மீதி திட்டத்தினை நிறைவேற்றி முடிப்பதுதான். அதற்க்குத்தான் கற்பிக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருந்தான். அதற்கு கொஞ்சம் வரம் அபிஷேகம் போதும்.

ஆனால் எலியா போல் இருக்க வேண்டும் அவனை போல் அற்புதம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டு கேட்டான். கடைசியில் அதுவே அவனை அழித்துவிட்டது. எலியா

மரணத்தினை உயிரோடு எடுத்து கொள்ளப்பட்டான் ஆனால் இரட்டிப்பான வரத்தினை பெற்ற எலிசா வியாதிப்பட்டு மரித்தான். (2இராஜா 13:14)

சிந்தனைக்கு : நூனின் குமாரன்

நூனின் குமாரன் யார் என்று கேட்டால் அனைவரும் யோசுவா என்று சொல்லுவோம். பரிசுத்த வேதத்தில் எங்கும் யோசுவாவை பற்றி சொன்னாலும், நூனின் குமாரன்.. நூனின் குமாரன் என்றுதான் குறிப்பிடுகின்றது. ஒரு சில இடங்களில் தகப்பனார் பெயரை சொல்லி ஊழியர் களையோ, தீர்க்கதரி சிகளையோ அறிமுகப்படுத்தினால் பரவா யில்லை. ஆனால் பல இடங்களில் நூனின் குமாரன் நூனின் குமாரன் என்று அடையாளப்படுத்தும் போது அதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஏன் நூனின் என்று யோசுவாவின் தகப்பனின் பெயரை ஆவியானவர் அதிகமுறை வேதத்தில் எழுதி வைத்துள்ளார்? ஏன் யோசுவா எப்போதெல்லாம் நூனின் குமாரன் என்றே அறிமுகப்படுத்தப்படுகின்றான்? இதற்க்கு பல காரணங்கள் இருந்தாலும் அதற்க்கு ஒரு ஆவிக்குரிய காரணம் உள்ளது. அது என்ன?

யாத்திராகமம் 33:11 - ல் நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்பு கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தான். என்று கூறுகின்றது.

உழைத்து சம்பாதிக்க வேண்டிய வாலிப வயது. ஆனாலும் ஆசரிப்பு கூடாரத்தில் எப்போதும் இருந்து கொண்டு பணிவிடை செய்து கொண்டு வந்தான். இதை அவன் தகப்பனும் அனுமதித்தான். லேவி கோத்திரத்தார் எப்போதும் ஆசரிப்பு

ஆசரிப்பு கூடாரத்தின் காவலை காப்பார்கள். அது அவர்கள் அழைப்பு. ஆனால் யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தான்(எண் 13:8) அவன் இருக்க வேண்டிய அவசியமில்லை. இருப்பினும் அவன் தகப்பன் நூனின் முழு மனதோடு சம்மதித்தான். அதற்கு உற்சாகப்படுத்தினான். எனவேதான் யோசுவாவை எங்கு அறிமுகப்படுத்தினாலும், நூனின் குமாரன் என்றே அறிமுகப்படுத்துகின்றது . யோசுவா என்ற கேரக்டர் உருவாக காரணம் அவன் தகப்பன் நூனின்.

இதை வாசிக்கின்ற நீங்கள் உங்கள் பிள்ளைகளை ஊழியத்தில் வளர உற்சாகப்படுத்தும் போது, அதற்க்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் போது பரலோகம் பெற்றோர்களாகிய உங்கள் பெயரையும் கனப்படுத்தும்.

யேசேபேல் ஆவியின் தாக்குதலின் அறிகுறிகள்…

ஊழியர்கள் தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக எழும்புவது யேசேபேலின் ஆவி ஆகும். இது ஒரு ஊழியக்காரனை, விசுவாசியை, அபிஷேகம் பெற்றவனை தாக்கினால் அதன் அறிகுறி எப்படி இருக்கும் என்பதனை தொடர்ந்து தியானிப்போம்.

1.ஏதோ காரியத்தில் திடீரென்று பயம் வருவது அல்லது அடுக்கடுக்காக பயம் வருவது. உதாரனமாக ஒரு சின்ன நோய் சரீரத்தில் வந்தாலே கேன்சரா இருக்குமோ? உயிர் போய்விடுமோ? வாழ்க்கை முடிந்து விடுமோ? என்று அடுக்கடுக்காக பயங்கள் வந்து கொண்டே இருக்கும்.

2.வாழ்ந்து என்ன பிரயோஜனம்? தற்கொலை செய்து கொள்ளலாமா? நம்மால் வாழ முடியாது என்ற என்னங்கள் அடிக்கடி அல்லது சில நேரங்களில் வருவது.

3.ஊழியத்தினை விட்டு பின்வாங்கி சென்றுவிடுவது அல்லது சென்று விடலாம் என்று நினைப்பது. வேலைக்கு சென்று விடலாமா என்று யோசிப்பது.

4. மற்ற ஊழியர்கள், விசுவாசிகள், நம்மால் இரட்சிக்கப்பட்டவர்கள், சகோதரர்கள், ஐக்கியத்தில் இருப்பவர்கள் மேல் எரிச்சல் கோபம் வருவது, அவர்களை சபிக்க தூண்டப்படுவது.

5.நான் மட்டும் தான் இப்படி கஷ்டப்படுகின்றேன் மற்றவர்கள், மற்ற ஊழியர்கள் நன்றாகத்தான் இருக்கின்றார்கள் என்று நினைப்பது.

6.தேவன் ஏற்கனவே பேசி சொன்ன வாக்குத்தத்தங்கள். தீர்க்கதரிசனங்கள், திட்டங்களை குறித்து அவிசுவாசிப்பது மற்றும் அதை குறித்து கவலையற்றிருப்பது.

7.திடீரென்று வரும் சோர்வு. அதாவது நன்றாக ஜெபித்திருப்போம் தேவபிரசன்னம் நிரப்பியிருக்கும்,ஊழியம் நன்றாக இருக்கும் ஆனால் மறுநாளே திடீரென்று சோர்வு வருவது.

இப்படிப்பட்ட அறிகுறிகள் வந்தால் அதே யேசேபேல் ஆவியின் தாக்குதலாக கூட இருக்கலாம். இந்த நேரங்களில் வாயின் வார்த்தைகளையும் ஜெபங்களை குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கூடுமானால் வாயை திறக்காமல் இருப்பது நலம். இரண்டு அல்லது மூன்று நாட்கள் இந்த பிரச்சனை இருக்கும். பின்பு இந்த ஆவி தோற்கடிகப்பட்டுவிடும்.

இத்தீர்க்கதரிசன செய்தி உங்களுடன் பேசியிருந்தால் முதலில் பரலோக பிதாவுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் முழு மகிமையை செலுத்துங்கள். மகிமை மண்ணான மனிதனுக்கு அல்ல தேவனுக்கே. எனக்கு அல்ல கர்த்தருக்கே

மிக முக்கியமானது வாசியுங்கள்!!!

தேவாதி தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்! இந்த ஊழியம் ஜெபிக்கின்ற ஊழியம். எங்களுக்கு வரும் ஜெபகுறிப்புகளுக்கு ஜெபிப்பதற்க்காக நான்கு ஊழியரை பகுதி நேரமாகவும், ஒரு நபரை முழு நேரமாகவும் நியமித்துள்ளோம். இன்னும் அதிகமானவர்களை நியமிக்க உள்ளோம். 24 மணி நேரமும் தொடர்ந்து ஜெபம் ஏறேடுக்கப்பட வேண்டும் என்பது தேவன் தந்த தரிசனம். உங்கள் ஜெப குறிப்புகள் எங்களுக்கு மிகவும் முக்கியம்.

உங்களுக்கு ஏதேனும் ஜெப குறிப்புகள் இருந்தாலோ அல்லது நீண்ட நாட்களாக அற்புதத்தினை பெற்றுக்கொள்ள கூடாதப்படிக்கு தடை இருந்தாலோ அதை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நாம் சேர்ந்து ஜெபிப்போம் தேவாதி தேவன் அற்புதம் செய்வார்.

உங்கள் ஜெப குறிப்புகளை எங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றால் SEND PRAYER LINK என்று TYPE செய்து 8608096748, 8608833150 என்ற WHATS APP எண்ணிற்கு அனுப்பவும். ஒரு PRAYER REQUEST FORM LINK அனுப்பபடும். அதை OPEN செய்து PRAYER REQUEST FORM -ஐ FILL பன்னுங்கள். நாங்கள் அதை பெற்றுக்கொள்ளுவோம்.

ஒரு மாதத்தில் ஒரு அற்புதம்…

இந்த திட்டம் பரிசுத்த ஆவியானவர் கொடுத்தது. அனேகர் இதற்க்காக ஜெபித்து தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். இதில் முப்பது தீர்க்கதரிசன ஜெபக்குறிப்புகள் உள்ளன. இதற்க்காக தினமும் ஜெபிக்கும்போது தேவாதி தேவன் உங்களுக்கு அற்புதங்களை செய்வார். இந்த ஜெபக்குறிப்புகள் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு அனுப்பி வைக்கின்றோம்.

தீர்கதரிசன செய்தியை WHATS APP-ல் பெற

இந்த செய்தியை WHATS APP மூலமாகவும் பெறலாம். தினந்தோறும் தீர்க்கதரிசன வாக்குத்தத்த வசனங்கள், தீர்க்கதரிசன தியானங்கள், தீர்க்கதரிசன துனுக்குகள் மற்றும் E-magazine ஆவியானவரின் வழிநடத்துதலின் படி WHATS APP மூலமாக அனுப்புகின்றோம். ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனிதனி குருப்கள் உள்ளன. சிலர் குருப்பில் சேர்க்காமல் தனியாகவும் அனுப்ப சொல்வார்கள் அவர்களுக்கும் அனுப்பபடுகின்றது. இன்னும் சிலர் E-magazine மட்டும் அனுப்பச் சொல்வார்கள் அவர்களுக்கும் அனுப்புகின்றோம்.

நீங்களும் இந்த செய்தியை WHATS APP மூலமாகவும் பெறலாம். WHATS APP மூலமாகவும் தீர்க்கதரிசன செய்தியை பெற வேண்டும் என்றால் SEND LINK என்று TYPE செய்து 8608096748 8608833150 என்ற WHATS APP எண்ணிற்கு அனுப்பவும். ஒரு REQUEST FORM LINK அனுப்பப்படும். அதை OPEN செய்து REQUEST FORM -ஐ FILL பன்னுங்கள். பின்பு எங்களுடன் இணைக்கப்பட்டு உங்களுக்கு தீர்க்கதரிசன செய்திகள் அனுப்பப்படும்.

தீர்க்கதரிசன வார்த்தைகள் ஊழியங்கள் மூலமாக வெளியிடப்படும் தீர்க்கதரிசன செய்திகள் அடங்கிய EMAGAZINE PDF மற்றும் JPEG வடிவில் அனுப்பபடுகின்றது. எந்த FORMAT உங்களுக்கு SUPPORT பண்ணுகின்றதோ அதை தெரியப்படுத்துங்கள் நாங்கள் அனுப்புகின்றோம்.

தீர்க்கதரிசன வார்த்தைகள் ஊழியங்களை பற்றி அறிந்து கொள்ளவும் ஆலோசனைகளுக்கும் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புக்கு கொள்ள வேண்டிய எண்கள்:

8608833150, 8608096748

இப்புத்தகத்தை பற்றி

எலியாவின் வாழ்க்கையில் என்ன நடந்தது?
அவன் எப்படி தன்னைக் குறித்து தேவன்
வைத்திருந்த திட்டத்தை இழந்து போனான்? எலிசா ஏன்
அபிஷேகம் பண்ணப்பட்டான்? எலியா எப்படி தன் தவறை
சரி செய்தான்? எலியா
எப்படி தன் காரியத்தினை சரி செய்தான்? எப்படி
பரிசுத்தமாக வாழ்ந்து எடுத்து
கொள்ளப்பட்டான்? என்பதனை என்பதனை ”சூரைச்செடி
எலியா” என்ற இந்த E-Book -ல் தியானிப்போம். ஜெபத்துடன்
இந்த புத்தகத்தை வாசியுங்கள். தேவ ஆவியானவர் உதவிச்
செய்வார். ஆழ்ந்த இரகசியங்களை
கற்றுக்கொள்வீர்கள்.

Published By :

Prophetic Words Ministries